ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2097/43 - 2018 නොවැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2018.11.16

*2097/43 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: J/DS/2/9/4/13-2015.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இல.: 4-3/11/2016/UDA/31.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மாகாணம் : வடமாகாணம்; மாவட்டம் : யாழ்ப்பாணம்; பிரதேச செயலாளர் பிரிவு : யாழ்ப்பாணம்; கிராம அலுவலர் பிரிவு: ஜே/81, கோட்டை; கிராமம் : யாழ்நகர், வட்டார இல. 1 (கோட்டை), யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்டது; ஆரம்ப வரைபட இல.: யா 2894; நோக்கம் : பொது பயணிகள் பேருந்து தரிப்பிடம் ஸ்தாபிப்பதற்காக.

**1. துண்டு இல. 1**
காணியின் பெயர் : தாண்டிக்குளங்கரை அயிங்நூட்டுவன் வயல் வரம்பு, கடையடித்திடல், வரி மதிப்பீட்டு இல. 66 (பகுதி), கந்தப்ப சேகரம் வீதி; விபரம்: ஏழு தென்னை மரங்கள், ஒரு வாகை மரம், ஒரு மருத மரம், இரண்டு நிரந்தரக் கட்டடங்களையுடைய தோட்டக் காணி; உரிமை கோருபவர் : கதிர்காமலிங்கம் செந்தில் குமரன், இல. 74, அரசடி வீதி, யாழ்ப்பாணம்; விஸ்தீரணம்: 0.0543 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 2**
காணியின் பெயர் : அஞ்சுதேவன்குளம்; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; விஸ்தீரணம்: 0.0037 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 3**
காணியின் பெயர் : தாண்டிக்குளக்கரை அயிங்நூட்டுவன் வயல் வரம்பு, கடையடித்திடல், வரி மதிப்பீட்டு இல. 72, கந்தப்பசேகரம் வீதி; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர் : பொது முகாமையாளர், பனை அபிவிருத்திக் கூட்டுறவுச்சபை, யாழ்ப்பாணம்; விஸ்தீரணம்: 0.0403 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 4**
காணியின் பெயர் : முத்தவெளி வடக்கு வயல், வரி மதிப்பீட்டு இல. 78, முனீஸ்வரம் வீதி; விபரம்: தரவைக்காணி; உரிமை கோருபவர் : சொலமன் றெஜி, இராஜசீலன் கருணசூரியதாஸ் மற்றும் மனைவி புளோறின்ரீனா, 143, பிரதான பாதை, யாழ்ப்பாணம்; விஸ்தீரணம்: 0.0763 ஹெக்டயார்.

**5. துண்டு இல. 5**
காணியின் பெயர் : முத்தவெளி வடக்கு வயல், வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாது, முனீஸ்வரம் வீதி; விபரம்: தரவைக்காணி; உரிமை கோருபவர் : தெரியாது; விஸ்தீரணம்: 0.0812 ஹெக்டயார்.

**மொத்தம் : 0.2558 ஹெக்டயார்.**



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொன்னம்பலம் தயானந்தன்,
பிரதேச செயலாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்,
2018, நவெம்பர் 12.

11 - 1351

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.